குறள் நெறிக்கதை

# மண்

ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

சென்னையிலிருந்து புறப்பட்ட விரைவுப் பேருந்திற்குள் மெர்சி தன் கணவன் அந்தோணியின் தோள்சாய்ந்து மடியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தலையை வருடியபடி வெளியில் வேடிக்கை பார்த்தாள்.

என்னவென்று தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் அடிக்கடி தாத்தா நினைவிற்கு வருகிறார் யார் தடுத்தும் கேட்காமல் அழுது, அடம்பிடித்து இதோ... கிராமத்திற்கும் போய்க்கொண்டிருக்கிறாளென்றால் அதற்குக் காரணம் அவள் தாத்தா அற்புதம்தான். பெயருக்கேற்ற குணமுடையவர்

ஜன்னலுக்கு வெளியே கட்டிடங்கள் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்க அவள் நினைவுகளும் பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தன. எங்கிருந்தோ பறந்து வந்த மண்துகள் கண்ணில் விழ, அதை இலாவகமாய் விரல் நுனியில் எடுத்துப்பார்த்தாள். கண்ணை உறுத்திய மண்துகள் கையில் எடுத்ததும், மனதை உறுத்த ஆரம்பித்துவிட்டது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு, தாத்தா சென்னையில் சிலமாதம் தங்கியிருந்தபோது நடந்த சம்பவத்தை நினைவூட்டியது மண்துகள்.

“ஏன் தாத்தா? எப்பப் பார்த்தாலும் அம்மாக்கிட்ட ‘ஊருக்குத் திரும்பிப் போய்டுறேன். கிராமத்துக்குப் போகனும்னு ஆசையாயிருக்கு’ ன் செல்லிட்டிருக்க... இத்தன வருஷமா அங்கதானே இருந்த, உனக்கு இங்கயிருக்கப் பிடிக்கலையா தாத்தா? எங்களோடயிருக்கனும்னு உனக்கு ஆசையேயில்லையா தாத்தா? ஊரில பெரியம்மா வீடுதான் உனக்கு பிடிச்சிருக்கு போல....” கண்கலங்கியபடி கேட்ட பேத்தி மெர்சியை வாரியணைத்துக் கொண்டார் அற்புதம்.

**“உங்களோடயிருக்குறதுக்கும் எனக்கு ஆசைதான்மா, ஆனா....”**

**“என்ன தாத்தா ஆனா, ஆவன்னான்னு உனக்கு இந்த சிட்டி லைஃப் பிடிக்கல, இதானே உண்மை”**

“ஆமாண்டா கண்ணு என்னதான் கிளியைப் பிடிச்சு தங்கக் கூண்டுக்குள்ள அடைச்சி வைச்சாலும் கிளிக்கு கூண்டு கூண்டுதானே, கிட்டத்தட்ட இப்போ என் நிலைமையும் அப்படிதான்மா, நா பொறந்து வளர்ந்து, வாழ்ந்த மண்ண இத்தினி மாசம் நா பிரிஞ்சிருந்ததேயில்ல.. என் கடைசி மூச்சு அந்த மண்ணுலதான் போகணும் இந்த அப்பார்ட்மென்ட் வாழ்க்கை எனக்கு ஒத்துவரலமா” பள்ளிக்கூடம் போக அடம்பிடிக்கும் குழந்தையின் விசும்பலோடு வார்த்தைகள் விழுந்தன.

“அதுக்கு ஏன் தாத்தா அழுவுற? கற்காத்தக்குடி போய் கொஞ்ச மண்ணஎடுத்துட்டு வந்துடலாம். அத உன் கூடவே எப்பவும் வைச்சுக்க தாத்தா” என்று கெஞ்சலோடு கேட்டதும் சிரித்து விட்டார்; அற்புதம்.

“அட கிறுக்கு கழுத... அங்கயிருக்குற மண்ண இங்க கொண்டாந்துபுட்டா சரியாப் போச்சா? அந்த மண்ணுல வாழுற மாதிரி ஆகுமா?”

“என்ன தாத்தா அப்பயிருந்து ‘மண்ணு மண்ணு’ னு புலம்பிட்டிருக்க... நம்ம கால்லகிடந்து மிதிபடுற மண்ணுல என்ன ‘சூப்பர் பவர்’ இருக்குது?” கிண்டலாய்ச் சிரித்தாள்.

“மண்ண சாதாரணமா நினைக்காதடா குட்டிமா, கடவுள் உலகத்தைப் படைக்குறப்போ முதல்நாள் முதல் வேலையா விண்ணுலகையும் மண்ணுலகையும் படைச்சார்னு நீ பைபிள்ல படிச்சிருப்பியே... நா சின்ன புள்ளையாய் இருக்குறப்போ மண்ணு தின்னு எங்கதாத்தாகிட்ட அடி வாங்கிருக்கேன். ஆனா அப்ப எனக்கு ஒன்னும் ஆனதில்ல, ஆனா இப்பதான் மனுசங்க தன்னோட மனசைப் போலவே மண்ணையும் நஞ்சாக்கிட்டாங்க இப்போ உங்கள மாதிரி வீடியோ கேம், ஆண்ட்ராய்டு கேம்லாம் நல்ல வேளை எங்க காலத்துல கிடையாது. மண்ணுலதான் எங்க

விளையாட்டு எல்லாமே. பொம்ம செஞ்சு, கூட்டாஞ்சோறு சமைச்சு, மண்ண குமிச்சு அதுல கல்லு ஒளிச்சு வைச்சு, கோலி, கபடி, கில்லினு எங்களோட விளையாட்டு எல்லாம் மண்ணுலதான். விளையாட்டுல விழுந்து காயம்பட்டாலும் மண்ண சலிச்சு காயத்துல போட்டா அம்புட்டு சீக்கிரத்துல காயம் ஆறிப் போயிடும். கை ரெண்டையும் மடக்கி தலகாணியாக்கி ஆத்து மணல்ல படுத்துறங்குறது ஆத்தா மடியில படுத்துறங்குறது மாதிரி அம்புட்டு சொகமாயிருக்கும்... பொறப்புலருந்து சாவுற வரைக்கும் ஏன் செத்த பின்னாடியும் நம்மள தாங்குற தாய்மா மண்ணு. பஞ்ச பூதங்கள்ல முதல்லயிருக்குற இந்த மண்ண எடுத்துதான் கடவுள் மனுசனையே படைச்சாரு... எத்தனையோ மன்னாதி மன்னனுங்க மண்ணை ஆளுறதுக்கு போட்டி போடுவானுவ.. கடைசில ஜெயிச்தென்னவோ மண்ணுதான். அவுங்களுக்கே இந்த நிலைனா நிலமோசடி, நில அபகரிப்பு, மணற்கொள்ளைனு அட்டூழியம் பண்றவங்களுக்கு என்ன நிலை காத்திருக்கோ? மனுசனோட அடிப்படைத் தேவை உணவு, உடை, இருப்பிடம்னு எல்லாமே மண்ணு நமக்குக் கொடுத்த பிச்சை மண்ணு நமக்கு கடவுள் கொடுத்த பொக்கிஷம். மனுசனுக்கான அடையாளம்.

பத்துமணி நேரம் தாத்தாவின் நினைவுகளில் மூழ்கிய பேருந்து கிராமத்திற்கு வந்த பிறகுதான் சுய நினைவிற்கு வந்தாள். பேருந்திலிருந்து இறங்கியதும் நேராக தாத்தாவின் கல்லறை முன்பு மண்டியிட்டு மண்ணை முத்தமிட்டாள். தன் மகனை மண்ணில் கிடத்தி கல்லறை மண்ணெடுத்து நெற்றியில் சிலுவையிட்டாள் “மண்-மனுசனின் அடையாளம், இறைவன் கொடுத்த பொக்கிஷம்” அவளையறியாமல் உதடுகள் முணுமுணுத்தன.

**குறள்: அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை (151)**

**பொருள்:**

தம்மைத் தோண்டுபவர்களையும் தாங்கி நிற்கின்ற நிலத்தைப் போல தம்மை இகழ்வாரைப் பொறுத்துக்கொள்ளுதல் சிறந்தது.

## பாழ் எய்தும் உலகம்

பெ.குபேந்திரன்

பால்வெளி ஆகாயமும்
பொருள்கள் வரை படைத்தது
அவற்றில் யாவும்
கரை படியாத் தூய பண்புடையன

ஒளிபடா வான்வெளிக்கு அப்பாலும்
பாழ் என்ற ஒன்றுமில்லை இயக்கம் உண்டு
ஒளிபட்டு நிலவும் நிலத்திலும்
உயிரினத் துடிப்பும்
பொருள்களின் தோற்றமும்
இயக்கமுண்டு

நாளும் ஆராய்ச்சி
அறிவியலோ முளைத்து வளர்கின்றது
முளைக்கும் அறிவியல்
நிலத்திலும் கடலிலும்
அணுவை வெடிக்கச் செய்கிறது - அது
வயிற்றுக்குக் கூழ்கிட்டாது

நிலமும் நீரும் காற்றும்
சீர் கெட்டழிய
உயிரினம் யாவும் பாழ்நிலை
எய்துகின்றது.

நிலம் நீர் காற்று
பாழ்வடா நிலைபெற
பண்டை வேளாண் முறையைப்
பின்பற்றி உழைத்திடு
மானிட சமூகம் மாண்புபெற
ஆணும் பெண்ணும் இணைந்து அகிலமான
உலகம் ஒருகால் பாழ்எனும்
இல்லா நிலை எய்தும்

## புத்தாண்டு-2017

ஆ.அருள்சாமி

புதிய பாரதம்
புதிய சரித்திரம்
படைப்போம் - இப்புதிய
புத்தாண்டில்.......

பண்பாட்டு உணர்வினை
பல்லாயிரம் பேர்
பாரில் அறிந்திட
வழி செய்திடுவோம் இப்புதிய
புத்தாண்டில்....

சமூக ஒற்றுமை
சமயத்தில் நிலவி
சமதர்ம சமுதாயம்
படைத்திடுவோம் - இப்புதிய
புத்தாண்டில்....

பழையன கழிந்து
புதியன தோன்றி
புன்னகை மலர்கள்
பூத்துக் குலுங்கட்டும் - இப்புதிய
புத்தாண்டில்...

நவீனத் துறையில்
நாகரிகம் வளர்ந்து
புவிப்பரப்பில்
புதுக் கண்டுபிடிப்புகள்
புரட்சி செய்யட்டும் - இப்புதிய
புத்தாண்டில்....

அதர்மம் ஒழிந்து
தர்மம் நிலைத்தோங்கி
நல்லாட்சி செய்யும்
நல் மனிதர்கள்
தோன்றிடட்டும் - இப்புதிய
புத்தாண்டில்...

சிறைச்சாலை ஒழிந்து
அறச்சாலையாம்
கல்விச் சாலைகள்
பெருகிடட்டும் - இப்புதிய
புத்தாண்டில்...

நல் கனவுகள்
நனவாகி
இத்தேசம்
வீரநடை
போடட்டும் - இப்புதிய
புத்தாண்டில்....

## பூமியை வாழ விடு

மு.சிவசுப்பிரமணியன்

வானுயர் மரங்களை வளர்த்து

வான் மழை பெருக்கி

வையத்தை வாழவிடு

சாயங்களை நீக்கி விடு

மாசுதனைப் போக்கி விடு

காயங்களை விலக்கி விடு

கங்கையைப் பாய விடு

ஆறுதனை இணைத்து விடு

அனைவரையும் வாழ விடு

இச்சைதனை நீக்கி

பச்சை தனை நீட்டி - பூமியை வாழ விடு

## நேரம் நல்ல நேரம்

பெ.குபேந்திரன்

விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்

அது முதுமையை விரட்டுவதற்கு!

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்

அது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு!

படிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்

அது இலட்சியத்தை அடைவதற்கு!

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்

அது இளமையை மெருகூட்டுவதற்கு!

அன்பு செய்ய நேரம் ஒதுக்குங்கள்

அது சொர்க்க வாசலை அடைவதற்கு!

உழைப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்

அது நோய்களை விரட்டுவதற்கு!

பண்பாட்டுக்கு நேரம் ஒதுக்குங்குள்

நம்மை உலகிற்குக் அடையாளம் காட்டுதற்கு!

## இளைஞர்களின் அறப்போராட்டத்தால் மீண்ட பண்பாடு

க.கலைச்செல்வி

நமது நாட்டு இன மாடுகளின் அழிவு என்பது இன்று நேற்று தோன்றியதல்ல. அதற்கு 300 வருட சாரித்திரம் இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்தியாவுக்கு வந்த இராபர்ட் கிளைவ் தான் தமது நாட்டு மாடுகளின் அழிவுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். கி.பி. 1755-ல் இந்தியாவுக்கு வந்த கிளைவ் தமிழர்களின் விவசாயத்தையும் பல்வேறு வளம் நிறைந்த இந்தியாவையும் பெரும் எண்ணிக்கையிலான நாட்டு மாடுகளையும் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தார். இம்மாடுகளை வைத்து எந்த செலவும் இல்லாமல் விவசாயம் செய்யும் தமிழனின் பாரம்பாரிய பண்பாட்டு விவசாய முறை அவரை உறுத்தியது அடிமை நாட்டில் வாழும் தமிழன் எப்படி அனைத்து தேவைகளையும் அவனே பூர்த்தி செய்து கொள்வது என்ற சிந்தனை இராபர்ட் கிளைவைத் தூங்க விடாமல் செய்து கொள்வது

அடிமை மக்கள் தன் நாட்டைச் சார்ந்து தான் இருக்க வேண்டும் என்று நினைத்த இராபர்ட் கிளைவ் விவசாயத்தின் முதுகெலும்பாகவும் விவசாயத்திற்கு உறுதுணையாகவும் இருந்த நாட்டு மாடுகளை அழிக்க வேண்டும் என்பதற்காக நாடு முழுவதும் பசுவதைக் கூடத்தை அமைத்து கி.பி.1760-ல் ஒரு இயக்கம் தொடங்கினார். அதன் மூலம் ஒரு நாளைக்கு 30,000 மாடுகளை கொன்று குவித்தார்

ஆனால் அதே வேளையில் நமது நாட்டுக் காளைகளின் வித்துக்களை எடுத்து அவர்கள் நாட்டில் காளைகளை உருவாக்கினார். அந்த மாட்டுச் சாணத்தையும் அதன் சிறுநீரகத்தையும் தம் நாட்டில் வயலுக்கு உரமாகப் பயன்படுத்தினார் இதன் மூலம் பல்வேறு மருத்துவ குணமிக்க பலன்களைக் கண்டறிந்தார்.

1907-ஆம் ஆண்டு மாடுவதைச் சட்டத்தால் ஒரு நாளைக்கு லட்சம் மாடுகளை கொன்று குவித்தார் இந்த விதத்தில் மாடுகள் அழிக்கப்பட்டால் இன்னும் எத்தனை ஆண்டுகள் மாடுகள் இருக்கும் என்பது தொரியவில்லை நமது பாரம் பரியத்தையும் பண்பாட்டையும் மீட்டெடுக்கும் நிலையில் தான் நாம் அனைவரும் இருக்கிறோம்.

மாடுகளின் மீட்புக்கான இப்போராட்டத்தில் நம் இளைஞர்கள் வெற்றிபெற்றுள்ளனர் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தோன்றியதோடு அறப்போராட்டம் வரலாற்றில் முத்திரை பதித்துள்ளது.

## குழிப்பணியாரம்:- (முக்குழி)

ஆ.சகுந்தலா

**தேவையான பொருட்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. பச்சை அரிசி | - | 2 ஆழாக்கு |
| 2. புழுங்கல் அரிசி | - | 2 ஆழாக்கு |
| 3. வெந்தயம் | - | 3 தேக்கரண்டி |
| 4. உளுந்து | - | 200 கிராம் |
| 5. உப்பு | - | தேவைக்கேற்ப |
| 6. வெல்லம் | - | ½ கிலோ (தேவைக்கேற்ப) |
| 7. ஏலம், சுக்கு | - | 2 (கல்) தேக்கரண்டி |
| 8. நல்லெண்ணெய் | - | தேவைக்கேற்ப |

**செய்முறை:-**

பச்சை அரிசி, புழுங்கல் அரிசி, உளுந்து, வெந்தயம் இவை அனைத்தையும் ஒன்றாகக் கலந்து 4 மணிநேரம் ஊரவைக்கவும் பின்பு சிறிதளவு தண்ணீர் ஊற்றி முக்கால் பதத்திற்கு உப்பு சோத்து அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும் மாவைக் கரைக்க வேண்டாம் மாவு பொங்கியவுடன் வெல்லத்தைப் பாகு காய்ச்சி மாவு ஆறியவுடன் ஊற்ற வேண்டும் பிறகு ஏலம், சுக்கு பொடி செய்து மாவில் போட்டு நன்கு கலக்க வேண்டும் பிறகு குழிப்பணியாரச் சட்டியில் மதிமான சூட்டில் நல்லெண்ணெய் இட்டு மாவை ஊற்றி வெந்தவுடன் திருப்பி விட்டு எடுக்க வேண்டும் குழிப் பணியாரம் தயார்.

**குறிப்பு:-**

வெல்லக்கட்டியை 100மி.லி தண்ணீர் ஊற்றி பாகு முறிந்து விடாமல் காய்ச்சி எடுத்துக்கொள்ள வேண்டும்

## மாதங்களில் மார்கழி

மு.செண்பகவள்ளி

மார்கழி பல்வேறு மகத்துவம் நிறைந்த மாதம் ஆகும். கிருஷ்ணனாக அவதரித்த பொழுது மாதங்களில் நான் மார்கழியாக உள்ளேன் என்றுரைப்பது இதன் சிறப்பைப் புலப்படுத்தும் என்று வருடத்தின் மற்ற நாட்களில் ஆலயத்திற்குச் செல்ல இயலாதவர்கள் இந்த மார்கழி மாதத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டாலே போதும், வருடம் முழுதும் சென்ற பலன் கிட்டும். இதற்காகவே ஆண்டாளும் மாணிக்கவாசகரும், திருப்பாவை, திருவெம்பாவை பாடி நமக்கு வழிகாட்டியுள்ளனர்.

### சமயப்பொறை மாதம் மார்கழி

உலகில் பல சமயங்கள் காணப்பட்டாலும் அவற்றின் முதல் சமயமாகிய இந்து சமயத்தில் இருபெரும் பிரிவுகள் உள்ளன. அவையே சைவம், வைணவம் ஆகும். இவ்விரண்டு சமயங்களின் கடவுளரான சிவன், திருமால் இருவரையும் இடைவிடாது வணங்கி வீடுபேற்றை அடைவதற்குரிய மாதம் இம்மார்கழி மாதமாகும். நட்சத்திரங்கள் 27-இல் திருவாதிரை என்ற சிவனுக்குரிய நட்சத்திரமும், திருவோணம் என்ற பெருமாளுக்குரிய நட்சத்திரமுமே திரு என்ற அடைமொழியுடன் காணப்படுகின்றன. மற்ற 25 நட்சத்திரங்களுக்கு இல்லாத இவ்விரண்டு நட்சத்திரங்களுக்கும் உரிய சிறப்பிலிருந்தே இவை ஒன்றிற்கொன்று இணையற்றவை, இரண்டும் வேறுபாடுகள் சிறிதுமின்றி சமமானவை என்பதை நமக்குக் காட்டுகின்றன. கோவில்களில் ஒரே கோவிலில் சிவனையும், விஷ்ணுவையும் வைத்து வழிபடுவது சமயப்பொறை ஆகும். இங்கு 12 மாதங்களில் ஒரு மாதத்தில் இருபெரும் கடவுளர்களான சிவனுக்கு ஆருத்ரா தாசனமும், விஷ்ணுவுக்கு வைகுண்ட ஏகாதசி என்ற பெருவிழாவும் இம்மாதத்திலேயே நடைபெறுகின்றன.

### சமய வளர்ச்சியில் பெண்கள்

சமணமும் பௌத்தமும் தழைத்தோங்கிய தமிழகத்தில் பெண்களால் தான் சமய மாற்றத்தினைக் கொண்டுவர முடியும் என்று மார்கழி முழுதும் மகளீரை பாடல்கள் பாடிவழிபடச் செய்வதன் மூலம் சைவ சமயம் வளரும் என்பதைக் கருத்தில் கொண்டே திருவெம்பாவையை மாணிக்கவாசகர் இயற்றினார். மார்கழி மாத பாவை நோன்பு, நோன்புகளில் மிகச்சிறந்தது. திருமணமாகாத கன்னிப்பெண்கள் நல்ல கணவன் கிடைக்க வேண்டும் எனவும், மணமான பெண்கள் தம் இல்லறம் எக்குறைவுமின்றி சிறக்க வேண்டும் என்றும் இறைவனை வேண்டி இம்முப்பது நாளும் நம்பிக்கையுடன் விரதமிருப்பர். இக்காலங்களில் பெண்கள் அதிகாலையில் எழுந்து நீராடி வீட்டைச் சுத்தம் செய்து கோலமிட்டுத் திருப்பாவை, திருவெம்பாவை பாடி இறைவனைத் துதிப்பர். இம்மார்கழி மாத வழிபாடு இன்றும் பெண்களால் தான் வழிவழியாகத் தொடர்ந்து வருகின்றது.

### மார்கழி மாதமும் அறிவியலும்

மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுதான பிரம்ம முகூர்த்தத்தில் (4.30 முதல் 6.00) வளிமண்டலத்தில் தூய்மையான ஓசோன் படலம் பூமிக்கு மிகத்தாழ்வாய் இறங்கி வந்து தரையில் படிகின்றது. ஓசோன் என்பது அடர்த்தியான ஆக்சிசஜனாகும். அவ்வோசோன் நீரிலும் கலந்திருப்பதால் அதிகாலையில் நீராடினால் உடலுக்கும் நல்லது. அதை சுவாசித்தால் நோய் எதிர்ப்பு சக்தியும், ஆரோக்கியமும் கிடைப்பதால் உடல் இயக்கம் எளிதாகிறது. ஆகவே அதன் பலனைப் பெற பெண்களைக் காலையில் கோலமிடவும், ஆண்கள்

பசனைப் பாடல்களைப் பாடும் போது திறந்தவெளியில் நடமாடுதலால் காற்றில் உள்ள ஓசோன் உடலிலும் படியும். ஆதலால் தான் இம்மாதம் முழுவதும் அதிகாலை கோலமிடுவதும் இறைவனை வணங்கச் செல்வதும் சிறப்பு வாய்ந்தது என நம் முன்னோர் அறிவியல் சார்ந்த உண்மையை இதில் புகுத்தினர்.

**மார்கழி தீயமாதமல்ல**

மார்கழி மாதத்தை நாம் சூன்யமாதம், பீடை மாதம் என்றெல்லாம் தவறாகக் கூறி வருகின்றோம். ஆனால் அதற்குப் பொருள் அதுவல்ல.

**சூன்யமாதம்**

சூன்யம் என்றால் ஒன்றுமில்லாதது எனப்பொருள். நிலையற்ற இந்த வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள வேண்டுமானால் சரணாகதி என்னும் உயர் தத்துவத்தைக் கடைபிடிக்க வேண்டும். ஆதலால் தான் இம்மாதத்தை இறைவழிபாடுகளுக்கென்றே ஒதுக்கி வைத்தனர்.

**பீடை மாதம்**

மார்கழி மாதம் முழுவதும் விரதம் இருந்து விட்ணுவை வழிபட்டால் செல்வச் செழிப்பைப் பெறுவர். அதனால் தான் இம்மாதம்பீடுடைய மாதம் என அழைக்கப்பட்டது என்றழைக்கப்பட்டது. இறைவழிபாட்டால் பெருமை நிறைந்த மாதம் என்பதே இதன்பொருள். பீடுடைய மாதமே பின்னாளில் மருவி "**பீடை மாதம்**" என்றானது.

**தனுர் மாதம்**

மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தனுசு இராசியில் தோன்றுவதால் இதனைத் தனுர் மாதம் என்றும் அழைக்கின்றோம். தனுசு இராசிக்கு அதிபதி குருபகவான். எனினும் குருபகவான் வீட்டில் சூரியன் மார்கழி மாதத்தில் தோன்றுவதால் இம்மாதத்தைத் தனுர் மாதம் என்றும் அழைக்கின்றோம்.

**தேவர் மாதம்**

மார்கழி மாதத்தைச் சைவர்கள் தேவர் மாதம் என்று குறிப்பிடுவர். ஏனெனில் தேவர்களுக்கு ஒரு நாள் என்பது ஒரு ஆண்டாகும். அதில் ஆறு மாதங்கள் பகல் பொழுதாகவும் ஆறு மாதங்கள் இரவுப் பொழுதாகவும் அமைகிறது. இதில் மார்கழி மாதம் என்பது வைகறைப் பொழுதாக அமைகின்றது. இம்மாதத்தில் தேவர்கள் வைகறைப் பொழுதில் பிரம்ம முகூர்த்தத்தில் பூமிக்கு வருவதாக மக்களிடம் காலங்காலமாக நம்பிக்கை காணப்பட்டு வருகின்றது. பூமிக்கு வரும் இத்தேவர்களையும், மகாலெட்சுமியையும் வரவேற்கவே பெண்கள் அதிகாலையில் கோலமிடுதலும், பக்திப் பாடல்களைப் பாடுவதும் ஆகும் என சைவ சமயவாதிகள் தொிவிக்கின்றனர்.

**சுபநிகழ்வுகளும் மார்கழியும்**

மார்கழி மாதம் நம் உடம்பைத் திடப்படுத்திக் கொள்ளவும் ஆற்றலைப் பெருக்கிச் சேமித்துக் கொள்ளவும், உடலில் சமன்பாட்டைக் கொண்டு வரவும் சாத்தியமான காலம் ஆகும். ஏனெனில் மார்கழி மாதம் மனித உடலின் சக்தி மையம் கீழிலிருந்து மேல்நோக்கி ஈர்க்கப்படுகிறது. ஏனைய காலங்களில் மூலாதாரத்தை நோக்கி இருக்கும் ஈர்ப்பு சக்தி புவிஈர்ப்பு விசை காரணமாக மார்கழியில் பூமியின் வடபாதியில் இருக்கும் மக்களான நமக்கு குறைவாகவே இருக்கும். இந்நிலையில் விதைவிதைத்தால் அது சாியாக முளைக்காது. உயிர்சக்தி மந்தமாயிருக்கும். இயற்கைக்கே இந்நிலை என்றால் மனிதனின் நிலை என்னவாகும். ஆதலால்

தான் இம்மாதத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்வுகளை நம் முன்னோர் மேற்கொள்ளாமல் இம்மாதத்தை வழிபாட்டிற்கென்றே ஒதுக்கி வைத்தனர். கருவுறுவதற்கு ஏற்ற சமயமும் இதுவல்ல. எனவேதான் இல்லறத்தில் இருப்போர் புலனடக்கத்தை மேற்கொண்டு வழிபாட்டில் கவனம் செலுத்துவதை மரபாகக் கொண்டனர். ஆதலால் தான் பன்னிரெண்டு மாதங்களில் வழிபாடுகளுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்ட இம்மார்கழி மாதத்தில் நம் முன்னோர் சுபநிகழ்ச்சிகளை நிகழ்த்துவதில்லை. எனினும் அதற்கான முன்னேற்பாடுகளான பெண்பார்த்தல் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தலாம் என சோதிட வல்லுனர்கள் தொவிக்கின்றனர்.

**மார்கழி நிகழ்வுகள்**

- மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசியும், ஆருத்ரா தரிசனமும் வருவது மட்டுமே பெரும்பான்மையாக நமக்குத் தெரியும். ஆனால் இம்மாதத்தில் பல முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.
- பாற்கடலில் அமுதம் கடையப்பட்ட போது முதலில் தோன்றிய விசயத்தை சிவன் உண்டு மக்களைக் காத்தது.
- மகாபாரதப் போர் நடைபெற்றது.
- இந்திரனால் கல்மாரி மழை பொழிந்து மக்கள் துன்பப்பட்ட போது கோவர்த்தன மலையைக் கிருஷ்ணன் குடையாகப் பிடித்து மக்களைக் காத்தது.
- இம்மாதம் முழுதும் பாவை நோன்பிருந்த ஆண்டாள் அரங்கனை அடைந்தது.
- சிவன் சிதம்பரத்தில் நந்தனாரை ஆட்கொண்டது.
- சிறுவனான மார்க்கண்டேயனின் பக்தியில் மெய்சிலிர்த்து அவனைக் கொண்டு செல்ல வந்த எமதர்மனைத் திருமால் எட்டி உதைத்து அவனைக் காத்தது.
- இராம நாமத்தையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு அனுதினமும் உச்சாத்து வந்த அனுமானாகிய ஆஞ்சநேயர் பிறந்தது.

**கோலத்தில் பூ வைப்பது**

திருமணத்தரகர்களோ, மணமகன் தேவை, மணமகள் தேவை என விளம்பரப்படுத்த ஊடகங்களோ இல்லாத அக்காலத்தில் தம் வீட்டில் திருமண வயதில் ஆண், பெண் பிள்ளைகள் இருப்பதை ஊராருக்கு உணர்த்த கோலத்தில் பூசணிப்பூ வைப்பர். அவ்வதிகாலை வேலையில் வீதியில் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு வரும் ஊர் மக்களின் கண்களில் இப்பூப்பட திருமண வயதுப் பிள்ளைகள் இருப்பதை உறுதி செய்து கொண்டு தைபிறந்ததும் திருமணத்தைப் பேசி முடித்துவிடுவார்கள். திருமண வயதில்லாத மற்றவர்கள் வீட்டின் கோலத்தில் பூ வைப்பதில்லை.

**கண்ணனும், கண்ணதாசனும்**
**தன்னை உணர்ந்த**
**கண்ணன் கூறினான்**
**மாதங்களில் ‘நான்’**
**மார்கழி என்று**
**பெண்ணை உணர்ந்த**
**கண்ணதாசனும் கூறினான்**
**மாதங்களில் ‘அவள்’**
**மார்கழி என்று.**

## இலக்கியச் சிறப்பு பெற்ற உத்திரகோசமங்கை

ந.முத்துமணி

உத்திரகோசமங்கையில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் திருவாதிரை நாளில் நடக்கும் ஆருத்திரா தாசனம் மிகவும் சிறப்பானதாகும்.

**உத்திரம் என்பது உபதேசம்.**

கோசம் என்பது இரகசியம் அதாவது பிரணவ மந்திரம் என்பது பொருள். மங்கைக்கு வேத உட்பொருட்களை உபதேசித்ததால் உத்திரகோசமங்கை எனப்பட்டது.

முன்னொரு காலத்தில் திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரர் ஒரு சமயம் மீனாட்சியம்மையாருக்கு வேதத்தின் உட்பொருட்களை உபதேசம் செய்து கொண்டிருந்தார். ஆனால் மீனாட்சியம்மை வேதப்பொருட்களை விருப்பம் இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார். இதனை அறிந்த சோமசுந்தரர் சினம் கொண்டு "கடற்கரைச் சோலையில் வாழும் பரதவ மன்னனுக்கு மகளாய்ப் பிறப்பாய். அங்கு வளர்ந்து வரும் நாளிலே நாம் உன்னைத் திருமணம் புரிந்து கொள்வோம்" என திருவாய் மலர்ந்தார். இதனை அறிந்த முருகனும், விநாயகரும் இதனால் தான் தன்தாய் பூலோகத்தில் பிறக்க நேர்ந்தது என்று வேதநூல்கள் அனைத்தையும் கடலில் எறிந்தனர். அதனை கடலில் சுறாவடிவம் எடுத்து நந்திதேவர் தாங்கிக் கொண்டார். அதன்படி மீனாட்சியம்மை குழந்தைவடிவம் பெற்று கடற்கரையில் ஒரு புன்னை மர நிழலிலே கிடந்தார். பலகாலமாக மகப்பேறு இன்றி வாடிய பரதவ மன்னன் அக்குழந்தையை எடுத்து மகளாக வளர்க்கலானார். அவள் வளர்ந்து பொயவளானாள்.

கடலில் சுறாவடிவம் கொண்ட நந்தியின் தொல்லை அதிகமானது. "தோணிகளையும், படகுகளையும் பிளவுபடுமாறு தாக்குகின்ற இந்த சுறாமீனை இங்கு வந்து பிடிப்பவன் எவனோ, அவனே எனது மகளுக்கு ஏற்ற கணவன்" என்று பரதவ மன்னன் அறிவித்தான். சோமசுந்தரர் வலைஞன் உருத்தாங்கி நாமே செல்வோம் என்று நினைத்து வலைஞன் வேடத்தில் வந்து சுறாமீனை வலையில் சிக்க வைத்தார்.

மனம் மகிழ்ந்த பரதவ மன்னன் வலைஞராக வந்த சிவபெருமானுக்கு தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான். பின்னர் சோமசுந்தரர் தன் சுயவடிவம் எடுத்து உமாதேவியருடனும், தன் பழைய வடிவத்தைப் பெற்ற நந்தியுடனும், தன் அடியார் கூட்டத்தோடும் உத்திரகோசமங்கை என்னும் தலத்தை அடைந்து, அங்கு உமாதேவியருக்கு வேதத்தின் இரகசியப் பொருட்களையெல்லாம் உபதேசித்தருளினார்.

இதனை, பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடல் புராணத்தின் ஐம்பத்து ஏழாவது படலமான வலைவீசன படலத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**"பெண்ணினை வதுவைக் கீந்த பெருந்துறைச் சேர்ப்பற்கன்று**
**தண்ணிளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேற்றோன்றி**
**விண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப் படையா னோடும்**
**உண்ணிறை யன்ப ரோடு முத்திர கோச மங்கை"** (திருவிளையாடற்புரா.57:61)

உத்திரகோசமங்கையில் உள்ள நடராஜர் கி.பி.2ம் நூற்றாண்டில் சண்முக வடிவேலர் என்பவரால் வடிவமைத்த உலகின் மிகப்பொய மரகதக்கல்லால் (எமரால்டு ஸ்டோன்) ஆனதாகும். ஐந்தரை அடி உயரம் கொண்டது. இந்த நடராஜர் தன் தூக்கிய திருவடியை, நுனிவாலால் நட்டமாக நிற்கும் பாம்பின் தலைப்படத்தில்

வைத்திருப்பது போல் உள்ளது. உலகில் வேறு எங்கும் இந்த சிற்ப அமைப்பு இல்லை எனலாம். மார்கழி திருவாதிரை அன்றைக்கு முதல் நாள் மட்டுமே இதன்மீது பூசப்பட்ட சந்தனம் களையப்பட்டு 32 வகை அபிசேடங்கள் நடத்தப்படுகிறது. மீண்டும் அன்றே புது சந்தனம் பூசப்பட்டு வருடம் முழுவதும் அக்கோலத்தில் தான் காட்சியளிக்கிறார். இதற்கு இரண்டு காரணம் உண்டு.

1. மத்தளம் கொட்டும் சத்தம் கேட்டால் கூட மரகதக்கல் உதிர்ந்து விடும் தன்மையது.
2. அக்காலத்தில் அன்னியர் படையெடுப்பில் இருந்து சிலையை பாதுகாப்பதற்காக சந்தனம் பூசப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. உத்திரகோசமங்கை தலச்சிறப்பும், மூர்த்தி சிறப்பும் பெற்ற தலமாகும்.

## பழையன கழிதலும் புதியன புகுதலும்

**லெ.பொ.பிரியா**

மார்கழி மாதம் முடிவடைந்து தை பிறக்கிற நாளில் தான் போகி கொண்டாடப்படுகிறது. போகிப்பண்டிகை என்பது இந்திரன் முதலியோரைப் பூசித்து வரவேண்டிய நாளாகும். பழங்காலத்தில் போகிப்பண்டிகை ஒரு நம்பிக்கை அடிப்படையில் கொண்டாடப்பட்டது. அதாவது இந்திரனுக்கு போகி என்ற பெயருண்டு. மழைக்குரிய கடவுளான இந்திரனை வழிப்பட்டால் மழை பொழிந்து பயிர்கள் செழிக்கும் என மக்கள் நம்பினர். அதுமட்டுமின்றி போகி என்பதற்கு பல துயரங்களை அழித்துப் போக்குவதால் இப்பண்டிகையைப் 'போக்கி' என்றனர். நாளடைவில் இச்சொல் மருகி 'போகி' என்றாகிவிட்டது. இந்நாளில் காக்கை முதல் அனைத்து உயிரினங்களுக்கும் உணவிடுவது வழக்கமாகும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற நோக்கத்தில் பயன்படுத்தப்படாத பழைய பொருட்கள் தீயிட்டு எரிக்கப்படும். இதனால் வீட்டில் இருக்கும் கண் திருஷ்டி கழியும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். பனிக்காலமான மார்கழி மாதம் முடியும் நாளான போகியன்று அருகில் அண்டியிருக்கும் பூச்சிகள், விசக்கிருமிகள் போன்றவற்றை அழிப்பதற்காகத் தான் பழையதை எரிக்கும் சடங்கை நடைமுறைப்படுத்தினர் முன்னோர். அத்துடன் குளிர்காலத்தில் வியாதிகள் எளிதில் தொற்றிவிடும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக மூலிகைச் செடிகளை எரித்து அதில் வெளிவரும் புகையை சுவாசித்தனர். வேப்பிலைக் கொத்துக்களை வீட்டு வாசலில் கட்டினர்.

இன்றைய இளைய தலைமுறையினர் போகிப்பண்டிகையை வேறுவிதமான புரிதலோடு அணுகுகின்றனர். தீபாவளி சமயத்தில் வெடிக்காது போன பட்டாசுகளையும், பழைய பொருட்களையும் வீட்டின் அருகிலேயே போட்டு எரிக்கின்றனர். இதிலிருந்து 'ஜிங்க் ஆக்ஸைட்' உட்பட பல்வேறு விதமான நச்சு வாயுக்கள் வெளியேறுகின்றன. அவை சுற்றுச் சூழலையும், காற்றையும், இயற்கையையும் மாசுபடுத்துகின்றன. குழந்தைகள், முதியோர்கள் கர்ப்பிணிகளுக்கு அதிக கெடுதல் நேரிடுகிறது. அதைச் சுவாசித்த தாய் தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் நச்சு குழந்தையையும் சென்றடைகிறது. ஆஸ்துமா நோயாளிகளை மிகவும் பாதிக்கும் பழைய பொருட்களை எரிப்பதன் மூலம் வெளியாகின்ற நச்சுக்காற்றை சுவாசிப்பதால் நுரையீரல் வியாதிகள் அதிகம் உண்டாகிறது. போகி தினத்தன்று முன்னோர்கள் நம் இல்லத்திற்கு வருவதாகவும், அவர்களுக்குப் பிடித்த உணவைப் படைத்து பூசை செய்வதன் மூலம் தீய எண்ணங்கள் விலகி நல்லெண்ணம் பிறக்கும் என்பது போகிப்பண்டிகையின் சிறப்பியல்பாகும்.

## இது பொன்னான வேளை

நெ.கிருஷ்ணவேணி

உறக்கத்தின் பிடியில் இருந்த
இரக்கம் அனைத்தும்
மறத்தின் வேர் பிடித்து
தருக்கம் செய்கின்ற வேளை.........

ஊடகத்தின் ஊழ்வினையால்
ஊனமாய் நின்றிருந்தோர்
உண்மையெனும் உரசலில்
விழுத்தெழுகின்ற வேளை...........

முகநூலில் முகம் புதைத்தோம்
வாட்ஸ் ஆப்பில் வாழ்விழந்தோம்
வசை பாடிய வார்ப்புகள் எல்லாம்
திசை மாறிய வேளை.......

பாசத்தின் பிம்பமெல்லாம்
பாராமுகம் காட்டிவிட்டால்
பாரதம் பிழைப்பதெங்கே? என
பாரெல்லாம் வண்ணம் பூச
பாசத் தமிழர் நாமென
பாமாலை பாடுகின்ற வேளை......

பண்பதனைப் படித்தவனும்
பண்பாட்டில் நிலைப்பவனும்
பரவி நின்றுவிட்டான்
இனி திரும்பிய திக்கெங்கும்
இன்பத் தமிழோசை
ஈடிலா வாகை பெறும் வேளை......

ஆம்....
இது பொன்னான வேளை

ஏறுதழுவுதல்

சே.செந்தமிழ்ப்பாவை

**ஏறுதழுவல்:-**

பழந்தமிழர் வாழ்க்கை காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இக்கருத்திற்கேற்ப பழந்தமிழகத்தில் நடைபெற்ற வீர விளையாட்டுகளுள் ஏறுதழுவுதலும் ஒன்றாக அமைந்துள்ளது. இவ்விளையாட்டை மேற்கொள்ளும் ஆடவரின் வீரத்தையும், காதலையும் புலப்படுத்துகிறது.

கட்டின்றித் திரியும் வலிய காளையினை ஒரு வீரன் அடக்கும் செயல் ஏறு தழுவல் என்று கூறப்படுகிறது. வீறுமிக்க காளையினை வலியடக்கி அதனை அகப்படுத்துதல் என்னும் கருத்தில் இதனை 'ஏறுகோடல் என்றும் குறிப்பிடுகின்றனர். ஏற்றினை அடக்கும் போது அதனால் ஏற்படும் இடர்களுக்கு அஞ்சாது அதன் மீது பாய்ந்தேறி அடக்குவதினால் இச்செயல் அவனது வீரத்தைப் புலப்படுத்துவதாக அமைவதினால் 'தழுவல்' என்னும் சொல்லோடு சேர்த்து ஏறுதழுவல் என பழந்தமிழர்கள் குறிப்பிடுகின்றனர்.

**தோற்றம்:-**

சிலம்பில் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகள் காணக் கிடைப்பதால், இவ்வீர விளையாட்டு இரண்டாம் நூற்றாண்டு அல்லது அதற்கு முன்னரே தோன்றியிருக்கலாம் என்பது நம் கருத்து. பாண்டியர்களின் ஆட்சிக் காலத்தில், அதாவது மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இந்த ஜல்லிக்கட்டு இருந்து வந்திருக்கிறது. பாண்டியர;களின் நாள்காட்டியில் இந்த விழா பற்றிய குறிப்புள்ளது. ஏறு தழுவுதலை தேசிய விளையாட்டாகக் கொண்ட இசுபெயின் நாட்டில் கூட **15**ஆம் நூற்றாண்டிலிருந்தான் "Bull Bitting" என்ற பெயரால் குறிக்கப்பட்டு இவ்விழா தொடா;ந்து நடத்தப்படுகிறது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

**கி.முஇரண்டாயிரத்தில் ஏறுதழுவல்:-**

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஏறு தழுவுதல் (மஞ்சு விரட்டுதல்) என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. கொல்லக் கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் **'கொல்லேறு தழுவுதல்'** என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. புது தில்லி தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கி.மு. **2000** ஆண்டு அளவிலேயே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது என்று ஐராவதம் மகாதேவன் போன்ற தொல்லியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**மக்களின் பொதுப்பண்பாடு:-**

அக்காலத்தில் மண் அசையா சொத்து, செல்வம் என பெயர் பெற்ற 'மாடு' அசையும் சொத்து, எதிரியின் இடத்தில் புகுந்து மாட்டு மந்தையை (ஆநிரை) கவர்வதே வம்புக்கிழுக்கும் யுத்த தந்திரம், ஆநிரை கவர்வோரும் அதை மீட்போரும் காளையை அடக்க வேண்டியது கட்டாயம் என்பதால் ஆறலைக் கள்வர்களும் அரண்மனை வீரர்களான மறவர்களும் அக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். முல்லை நிலத்தவரை தவிர வேறு எந்த நிலத்தவரும் ஏறு தழுவியதாக எந்த செய்தியும் இலக்கியத்தில் இல்லை என்றாலும் இது தமிழர்களின் பொதுப்பண்பாடாகவே அறியப்பட்டுள்ளது.

**சல்லி-ஜல்லி-ஏறுதழுவுதல்:-**

இசுபெயின் உள்ளிட்ட உலகின் சில நாடுகளில் எருது அடக்கும் விழாக்கள் நடக்கின்றன. ஆனால் அவை விளையாட்டாகவே நடக்கிறது. கலாச்சாரத்தின் அல்லது வாழ்வியலின் வெளிப்பாடாக விளங்கவில்லை. முற்காலத்தில் மாட்டின் கழுத்தில் புளியம் விளாறை சுற்றியிருப்பார்கள். இதை சல்லி என்பர், பிற்காலத்தில் மாட்டின் கொம்புகளில் பரிசுக்காக காசுக்களை கட்டியிருப்பர். இதை ஜல்லி என்பர். கழுத்தில் கட்டிய மணிகளை வைத்தோ, கொம்புகளில் கட்டிய பரிசுப்பணத்தை வைத்தோ சல்லிக்கட்டு அல்லது ஜல்லிக்கட்டு என பிற்காலத்தில் பெயர் பெற்றாலும் ஏறு தழுவுதல், மஞ்சு விரட்டு, எருதுப்பிடி போன்றவையே இந்த விளையாட்டின் முந்தைய பெயர்கள்.

**சல்லிக்கட்டு:-**

இன்றைய நாட்களில் ஏறுதழுவல் என்பது, பொங்கல் திருநாளை அடுத்து மாட்டுப் பொங்கல் கொண்டாடிய பின்னர் பொதுவாகக்காளைகளுக்குப் பரிசுப் பொருள்கள் கட்டி ஊர்ப் பொதுவிடங்களில் இளைஞர் பிடிக்குமாறு விடும் ஒரு விழாவாக நடைபெறுகிறது. ஏறு தழுவல் இக்காலத்தில் மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு என்னும் பெயர்களில் வழங்கிவருகின்றது.

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங் கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது. மேலும் **50** ஆண்டுகளுக்கு முன்பு பழக்கத்தில் இருந்த 'சல்லிக் காசு' என்னும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடப்படும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிகட்டு' என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து 'ஜல்லிக்கட்டு' என்று ஆனது என்றும் கூறப்படுகிறது.

தமிழர்களின் வீர விளையாட்டுகளில் சல்லிக்கட்டு மிகவும் புகழ்பெற்றது. பொங்கல் பண்டிகையையொட்டி மதுரைப் பகுதியில் சல்லிக்கட்டு நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடத்தப்பட்டுவருகிறது. இதில் அலங்காநல்லூர் பாலமேடு சல்லிக்கட்டு உலகப்புகழ் பெற்றதாகும். மதுரை அருகே அவனியாபுரத்தில் தான் முதலில் அதாவது பொங்கல் அன்றே சல்லிக்கட்டு நடத்தப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் சிராவயல் திருச்சி மாவட்டத்தில் கூத்தைப்பான், தஞ்சை மாவட்டத்தில் மாதாக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டத்தில் தத்ததன்குரிசி, போன்ற ஊர்களில் நிகழும் சல்லிக்கட்டுகள் குறிப்பிடத்தக்கன.

**முரசறைந்து தெரிவித்தல்:-**

ஏறு தழுவல் ஓர் ஊர்விழாபோல் நடைபெறுகிறது ஏறு தழுவலைத் தொடங்கு முன் பறைகளை அடித்து முழங்கிப் பேரொலி எழுப்புகின்றனர். பறையறைந்தும் இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுத்தனர். சல்லிக்கட்டு நடைபெறும் நாளினை ஒலிபெருக்கியின் மூலமும் சுவரொட்டிகள் மூலமும் விளம்பரம் செய்கின்றனர். பெரும் விழாவாக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பல்வேறு ஊர்களைச் சேர்ந்த இளைஞர்கள் போட்டியாளராகக் கலந்து கொள்கின்றனர்.

**ஏறு தழுவலுக்கு முன்:-**

அக்காலத்தில் ஏறு தழுவும் நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் மாலையிலோ, பிந்தைய நாள் மாலையிலோ குரவை கூத்து நடக்கும். இதில் ஆயர் குல ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடுவர். ஆயர் கன்னியர் பாடும் பாடல் ஏறு தழுவப்போகும் தன் காதலனை உசுப்புவது போலவோ, ஏறு தழுவி வென்றவனை புகழ்வது போலவோ அமைந்திருக்கும்.

**சிறப்பான காளைகள்:-**

சல்லிக்கட்டிற்கென்றே மிகவும் நேர்த்தியாக வளர்த்த காளைகள் சரந்தாங்கி, பாலமேடு, அவனியாபுரம், சந்திரப்பட்டி, திருப்பரங்குன்றம், கீழ்ச் சின்னம்பட்டி, ஓடைப்பட்டி, திண்டுக்கல், மேலூர், திருச்சி, கோட்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வரவழைக்கப்படுகின்றன. புலிக்குளம் என்னும் ஊர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. ஜல்லிகட்டுக்கு என்று பிரத்யேகமாக வளர்க்கப்படும் காளையினம் புலிக்குளம். இது காங்கேயம் காளைகளை விட மிகவும் ஆக்ரோசமானது. புலிக்குளம் காளைகளை பாரம்பரிய கால்நடை வளர்ப்பாளர்களான கோனார்களே (ஆயர்) வளர்த்து வருகின்றனர். உலகளவில் இந்திய நாட்டின் பசுக்களின் பாலே அதிக நோய் எதிர்ப்பு

சக்தி கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. அதிலும் புலிக்குளம் இன பசுக்களின் பாலே சிறந்தது என்று விஞ்ஞானிகளால் நிருபிக்கப்பட்டுள்ளது.

**காளைகளை அடக்கும் முறை:-**

கொம்பைப் பிடித்து அழுத்தல், கழுத்தைப் பிடித்துக்கொண்டு காளையில் மார்பில் தொங்கல், கழுத்தைத் திருகல், திமில் என்னும் கொட்டேறியைத் தழுவல், தோளில் ஏறல், நெருக்கிப் பிடித்தல் முதலானவை காளையை அடக்கப் பொதுவர் கையாண்ட உத்திகள் ஆகும்.

**அ) ஏறுதழுவலின் போது ஆடவரின் செயல்கள்:-**

பிடவம்பூ, செங்காந்தள்பூ, காயாம்பூ உள்ளிட்ட மலர்களை அணிந்த ஆயர்கள் தம் காளைகளை அடக்குபவர்களுக்குத் தம் மகளைத் தருவதாக உறுதியளித்து சிவபெருமானின் குந்தாலிப்படை போன்று மாட்டின் கொம்புகளைக் கூர்மையாகச் சீவினர். அவ்எருதுகள் இடிஒலி போல முழக்க மிட்டுத் தொழுவுக்கு வந்தன. அந்த எருதுகளைத் தழுவியவருக்கு அளிப்பதாகச் சொன்ன மகளிர் வரிசையாகய் நிற்பா். ஈடுபடும் இளைஞர்கள் நீர;த்துறைகளிலும், ஆலமரத்தின் கீழும், மாமரத்தின் கீழும் உள்ள தெய்வங்களை வணங்கி முறைப்படித் தொழுவில் பாய்ந்து காளைகளை அடக்குவா் அவ்வாறு அடக்க முற்படுபவனின் மார்பைக் காளைகள் குத்திக்கிழிப்பது உண்டு

பல வகை காளை மாடுகள் ஓரிடத்தில் (பட்டி) அடைக்கப்பட்டு, பின்பு மாடுபிடிக்க விடப்படும், அவ்வாறு அடைக்கப்பட்டிருந்த பல மாடுகளின் காட்சி ஒரு குகையில் சிங்கம், குதிரை, ஆண் யானை, முதலை தலியவற்றை ஒரே இடத்தில் அடைத்தால் ஏற்படும் நிலைபோல பட்டியில் இருந்தது எனச் சங்க இலக்கியப் புலவன் றிப்பிட்டுள்ளான் புலிக்குளம் காளை .

**ஆ)காளைச்சண்டை:**

ஏறு தழுவலை ஒத்த நிகழ்ச்சிகள் காளைச் சண்டை என்னும் பெயரில் இக்காலத்தில் இசுபெயின் போன் பிற நாடுகளில் இன்றும் பெரிய அளவில் விழாவாகவும் தொழில் முறையாகவும் நடைபெற்று வருகின்றன. அந்நாடுகளில் நடைபெரும் செயல்கள் தமிழகத்தில் பழங்காலத்தில் நடைபெற்ற ஏறுதழுவலைப் போலக் காணப்பட்டாலும் இரண்டிற்கும் அடிப்படையான வேறுபாடுள்ளது இரண்டிடங்களிலும் காளைகளால் வீரர்கள் தாக்குன்டாவதும் உயிர்துறத்தலும் நிகழ்தல் கூடும் ஆனால் மேலை நாட்டு நிகழ்ச்சியில் வென்ற வீரன் தன் வெற்றிக் குறியாக வென்ற ஏற்றினைக் கொன்றுவிடுவது மரபு ஆகும். தமிழகத்து ஏறுதழுவலில் அன்றும் இன்றும் வென்ற வீரன் அடக்கிய ஏற்றினைக் கொல்லுவதென்பது இலலை என்பது சிறப்புடையதாகும்.

**ஜல்லிக்கட்டு - வகைகள்:-**

ஜல்லிகட்டில் இரண்டு வகைகள் உள்ளன. வாடிவாசல், வெளிவிரட்டு என்பன அவ்விரண்டு வகைகள். முன்னதில் மாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வாடிவாசல் வழியாக திறந்துவிடப்படுகின்றன. பின்னது வெளிவிரட்டு எனப்படும் திறந்த வெளியில் மாடுகள் அவிழ்த்துவிடப்படுவது. பின்னதில் மாடு எந்தப் பக்கம் இருந்து வரும், யாரைத் தூக்கும் என்று தெரியாது. அந்த இடம் யுத்தகளத்தை ஒத்திருக்கும்.

சிராவயல், பலவான்குடி, திருப்பத்தூர் வேந்தன்பட்டி, ஆத்தங்குடி, வெளுவூர் என்று மதுரை சிவகங்கை புதுக்கோட்டை பகுதிகளில் நடைபெறும் ஜல்லிக்கட்டுகள் வெளிவிரட்டு வகையைச் சேர்ந்தவை.

**ஜல்லிக் கட்டு என்ன எப்படி?**

இந்த ஜல்லிக்கட்டுக்கு காளைகளை தயார்படுத்துவதே ஒரு தனிக்கலை எனலாம். இந்த காளைகள் எந்த வேலையும் செய்வதில்லை. இவற்றிற்கு பச்சரிசி மாவும், நவதானியங்களும் உண்ணக் கொடுக்கப்படுகின்றன. மேலும், இந்தக் காளைகள் சற்றேறக் குறைய வளர்ப்பவரின் குணத்தைக் கொண்டிருக்கும். இந்த ஜல்லிக்கட்டுக் காளைகள் விளையாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் சாதுவாகவே இருக்கின்றன. அதாவது, இவற்றிற்கு இது விளையாட்டு என்பது தெரிந்தே இருக்கிறது.

**இலக்கியங்களில் ஏறுதழுவல்:-**

பழந்தமிழ் நூலான கலித்தொகையின் முல்லைக்கலியில் இடம்பெறும் பாடல்களில் ஏறுதழுவுதல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாம் நூலிலும் பட்டினப்பாலையிலும், சிலப்பதிகாரத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

**முல்லை நிலமும், ஏறு தழுவலும்:-**

ஏறு தழுவுதல் வீறுடைய ஏறு முல்லை நிலத்தில் வளமான புல்லுண்டு. அதனை வயிறார மேய்ந்து மாடுகள் அழகிய மேனி பெற்று விளங்கும். அந்நிலத்தில் வாழும் ஆயர்க்கு அவைகளே அரும்பெருஞ் செல்வம். மாடுகளில் ஆண்மையுடையது எருது அதனை ஏறு என்றும் காளை என்றும் கூறுவர். வீறுடைய ஏறுகள் கடும் புலியையும் நேர் நின்று தாக்கும். வலிய கொம்புகளால் அதன் உடலைக் கீறிக் கொல்லும், இத்தன்மை வாய்ந்த எருதுகளைக் "கொல்லேறு" என்றும். " மாக்காளை" என்றும் தமிழ் நாட்டார் போற்றுவர்.

**ஏறு தழுவலின் போது ஆண்களின் நிலை:-**

மஞ்செனத் திரண்ட மேனி வாய்ந்த மாக்காளைகளைக் கண்டு ஆயர்குலத்து இளைஞர் அஞ்சுவதில்லை அவற்றின் கொட்டத்தை அடக்க மார்தட்டி நிற்பர் ஏறுகோள் என்பது அவர்க்குகந்த வீர விளையாட்டு அக்காட்சி நிகழும் களத்தைச் சுற்றி ஆடவரும் பெண்டிரும் ஆர்வத்தோடு நிற்பர். செல்வச் சிறுவர் உயர்ந்த பரண்களில் அமர்ந்திருப்பர் ஏறுகளுடன் போராடுவதற்கு மிடுக்குடைய இளைஞர்கள் ஆடையை இறுக்கிக் கட்டி முறுக்காக நிற்பர் அப்போது முரசு அதிரும் பம்பை முழங்கும் கொழுமையுற்ற காளைகள் தொழுவிலிருந்து ஒவ்வொன்றாக வெளிப்படும் களத்திலுள்ள கூட்டத்தைக் கண்டு கனைத்து ஓடிவரும் ஒரு காளை கலைந்து பாயும் ஒரு காளை; தலை நிமிர்ந்து, திமில் அசைத்து, எதிரியின் வரவு நோக்கி நிற்கும் ஒரு காளை; அவற்றின்மீது மண்டுவர் ஆயர்குல மைந்தர். கொம்பிலே உள்ளது காளையின் தெம்பு என்றறிந்து அதனையே குறிக்கொண்டு செல்வர் வசமாகப் பிடி கிடைத்தால் காளையின் விசையடங்கும்; வீறு ஒடுங்கும் ஏறு சோர்ந்து விழும்.

**கலித்தொகையில் ஏறுதழுவல்:-**

தமிழர் திருநாளாம் பொங்கலையொட்டி பல ஊர்களில் இவ்விளையாட்டு நடத்தப்படுகின்றது. இதைக்காண வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமானோர் தமிழகத்திற்கு வருகை தருகின்றனர். வேறு சங்க நூல்களில் காணப்பொறாத ஏறுதழுவலைக் கலித்தொகை மட்டுமே குறிப்பிடுகின்றது. முல்லைக் கலியில் உள்ள பதினேழு பாடல்களில், முதல் ஏழு பாடல்கள் ஏறுதழுவலைப் பற்றிக் கூறுகின்றன.

கலித்தொகையின் முல்லைக்கலியின் இடபெறும் பகுதியில் மாடுகளின் நிறம், மாடுகளின் வகை, மாடுகளின் வீரம், அதனை அடக்கும் இளைஞர்களின் செயல், பரண்மீது அமர்ந்து ஏறு தழுவு தலைப் பார்க்கும் பெண்களின் பேச்சுகள், பெண்களைப் பெற்ற பெற்றோர்களின் இயல்பு யாவும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு ஒழுங்கு முறைக்குள் வந்து விட்ட இவ்வேறுதழுவுதல் நிகழ்ச்சி அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றிருக்கவேண்டும்.

ஏறு தழுவும் ஆண்களை பண்டைக் காலப் பெண்டிர் விரும்பி மணந்தனராம். ஆயர்குலப் பெண்டிர் தெருவில் பால் மற்றும் பால் பொருட்களினை விற்கும் பணியினை அந்நாளில் மேற்கொண்டிருந்தனர். அவ்வாறு தெருவில் அப்பெண் நடந்து செல்லும்போது, இவளின் கணவன் ஏறுதழுவிய வீரன் என அறிந்து மற்ற ஆண்களெல்லாம் அப்பெண்ணிடம் மரியாதையுடனே நடந்துகொள்வராம். அந்நாட்களில் திருமணம் முடிப்பதற்கு ஒரு ஆடவன் ஏறு தழுவியிருக்க வேண்டுமென்பது முக்கியத் தகுதியாகும் இவ்வாறாக முல்லைக் கலி எடுத்தியம்புகிறது.

ஏறுதழுவலால் நிகழக்கூடிய துன்பங்களுக்கு அஞ்சிப் பின்வாங்கும் இளைஞனைக் காதலித்தவளும் ஏற்க மறுப்பாள் என்பதனை,து

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை**
**மறுமையும் புல்லாளே ஆய்மகள்** (**கலித்**.103 (63-64))

என வரும் இலக்கியப்பகுதி உணர்த்துகிறது இதனால் ஆயர்குலப் பெண்ணின் காதலும் வீரப்பண்பினைப் பின்னணியாகக் கொண்டு விளங்குதனை உணர்தல் கூடும்.

**ஏறுதழுவி வென்றவன்:-**

ஏறு தழுவிய வீரனை மணந்த ஓர் ஆயமகள் நெய்மோர் முதலிய பால் பொருட்களை விற்றுவரச் செல்லுங்கால் இவள் கணவன் ஏறு தழுவி வென்றவன் என்று மற்றவர்கள் பேசும் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து அப்புகமுரையினைத் தாம்பெறும் சிறந்த செல்வமெனப் போற்றுகிறாள்.

**"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்**
**ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி"** (**கலித்**:106(1-2))

எனத் தொடங்கும் கலித்தொகைப்பாடல் **(106**) வழி ஏறுதழுவலைப் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் வீரத்தையும் காதலையும் ஒருங்கே பேணி அவற்றைத் தம் வாழ்க்கையின் அடிப்படை நிலைக்களமாகக் கொண்டிருந்தமை புலப்படுகிறது.

**மலைபடுகடாம்:-**

முல்லை நில மக்களும் தங்கள் நிலங்களில் உள்ள வலிமை வாய்ந்த எருதுகளை ஒன்றுடன் ஒன்று பொருதும்படியாகச் செய்து ஆரவாரம் செய்வர். இவ்வெருதுகளின் வெற்றியைத் தங்கள் வெற்றியாக எண்ணி மகிழ்வர். இதனை,

"இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தன் ஊறுபடத்தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉம் கல்லென் கம்பலை **(மலை. 330-335)**

**சிலப்பதிகாரம்:-**

வளமுடைய இளைய காளையை அடக்கியவருக்கு எறியவருக்கு உரியவள் இம் முல்லை மலரை அணிந்துள்ள மென்னமையான கூந்தலையுடையவள் என ஆய்ச்சியர்கள் ஆடிப்பாடுவதைச் சிலப்பதிகாரம் 'மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள் இம் முல்லையம் பூங்குழல் தான் (சிலம்பு. ஆய்ச்சி.கொளு.8) என்று குறிப்பிடும்.

**காளையினை அடக்குதல்:-**

வீரர்கள் ஏறுகளை அடக்க முற்படுகின்றனா; சில காளைகள் தம்மைத் தழுவ முற்படும் வீரர்களைத் தம் கோட்டால் குத்திக் குடர்சொரியச் செய்துவிடுவதுமுண்டு எருதின் சினத்தைப் பொருட்படுத்தாது பாய்ந்த பொதுவனை அவ் எருது சாடி கொம்பின் நுனியால் குத்திக் குலைப்பதனை,

"**மேற்பாட்டு உலண்டின் நிறன் ஒக்கும் புன்குருக்கன்**
**நோக்கு அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்தி**
**கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம் காண்" (கலித்.101 (15-17))**

என்று அத்தகைய காட்சியினைத் தோழி தலைவிக்குக் காட்டுகிறாள் காளைகளுக்கும் வீரர்களுக்கும் நடந்த ஏறு தழுவல் ஏறு தழுவல் முடிவுற்ற களக்காட்சி

**"எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு**
**ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்"** (கலித் **102. (21-24)**

என்று அழகுற வருணிக்கப்பட்டுள்ளது. தலைவியால் காதலிக்கப் பெற்ற வீரன் தங்கள் காளைகளை அடக்க முற்படும் வீரச் செயலைத் தனி இடங்களிலிருந்து தலைவியர், தோழியருடன் கண்டுமகிழ்கின்றனர்


**ஏறுதழுவலுக்குமுன் (குரவைக் கூத்து)**

அக்காலத்தில் ஏறு தழுவும் நிகழ்ச்சிக்கு முந்தைய நாள் மாலையிலோ, பிந்தைய நாள் மாலையிலோ குரவை கூத்து நடக்கும் இதில் ஆயர் குல ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடுவர், ஆயர் கன்னியர் பாடும் பாடல் ஏறு தழுவப்போகும் தன் காதலனை உசுப்புவது போலவோ, ஏறு தழுவி வென்றவனை புகழ்வது போலவோ அமைந்திருக்கும். ஏறுதழுவல் முடிந்த பின்னர்ப் பெண்களும் ஆண்களும் குரவைக் கூத்தாடுகின்றனர்.

**நூல்மதிப்புரை**

செம்மொழிச் சிந்தனைகள் ...

.ந.முத்துமணி



நூலாசிரியர்
முனைவர்.சே.செந்தமிழ்ப்பாவை
வெளியீடு
பல்லவி பதிப்பகம்
194, கண்ணா வணிக வளாகம்
2-வது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638011.
தொலைபேசி : 0424 - 2263197, 94422 51549
இணையதளம் : www.pallavinetworks.in
மின்னஞ்சல் : pavaisentamizh17@gmail.com
பக்கம் : 112 விலை : ரூ. 75ᐟ-

நூலாசிரியர் சங்க இலக்கியத்தின் பதினாறு முத்துக்களைக் கோர்த்து செம்மொழிச் சிந்தனைகள் என்ற மாலையைத் தந்திருக்கிறார். இவரது நோக்கம் ஆய்வாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதனால் மட்டும் உலகம் பயன் பெறாது அவர்களுடைய ஆய்வு மற்றவர்களுக்குப் போய்ச் சேர்ந்தால் தான் ஆய்வுச் சிந்தனையானது பரவும் என்பதாகும் எனவே தான் தனது பதினாறு ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்துள்ளார்.

ஆநிரை மேய்க்கும் தன் தந்தையின் பசு ஒன்று பயிரை மேய்ந்ததால், அவரின் கண்ணைப் பிடுங்கித் தண்டனை கொடுத்த கோசரை, அன்னிமிஞிலி என்ற பெண் உணவு உண்ணாமல், தூய உடை உடுத்தாமல் மன்னனாக இருந்த போதிலும் வஞ்சினம் கூறி முடிக்கிறாள். பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்பதையும், பெண்கள் தன் உரிமைக்காக வெகுண்டெழுவார்கள் என்பதையும், சங்க மகளிரின் தன்னுரிமைக் குரல்கள் என்ற கட்டுரை விளக்குகிறது. அன்னிமிஞிலியை திரௌபதியின் முன்னோடி என்று சொல்வதில் ஐயமில்லை.

தன் மகள் சூடிக் கொள்வதற்காகப் பூத்தொடுத்துக் கொடுத்த தந்தை, தன் மகளைப் பெண் கேட்டு வந்தவன் மன்னனாக இருந்த போதும் நலம் குன்றியிருப்பதால் அவனுக்கு கொடுக்க மறுக்கும் தந்தை என தந்தை-மகள் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தமையை, சங்கப்பாடல்களில் செவிலியே தலைவியிடம் மிகவும் அன்பு கொண்டவள் என்ற நிலையையும் தாண்டி நூலாசிரியர் பதிவு செய்துள்ளார். தொல்காப்பியர் சுட்டாத விடுபேறு கோட்பாடு சுவர்க்கம் என்றும், "புத்தேள் நாடு" என்றும் சங்க இலக்கியத்தில் தோற்றம் பெற்றுள்ளது. வீடுபேற்றை உடம்போடு அடைவது ஒரு நிலை, உடம்பினை விடுத்து அடைவது மற்றொரு

நிலை. தவம்செய்தால் உடம்போடு வீடுபேறு அடையலாம் போன்ற செய்திகளை புத்தேள் நாடு என்ற கட்டுரை விளக்குகிறது.

சங்க அகப்பாடல்களில் காணப்படும் அரிய கூற்றான சேட்படை என்பது தலைவியை அடைவது எளிது என்று நினைத்து வந்த தலைவனது நினைவை அது அத்துனை எளிதன்று என்று தோன்றும்படி தோழி கூறுவது ஆகும். இது தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியத்திலோ இடம் பெறவில்லை. நற்றிணை, ஐங்குநுறூறு, அகநானூறு ஆகிய நூல்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளமையை சேட்படை கட்டுரை பதிவு செய்துள்ளது. தொல்காப்பியத்தினையும், சங்க இலக்கியத்தினையும் நன்கு உள்வாங்கியவர்கள் மட்டுமே இம்முடிவினைக் கொடுக்க முடியும்.

பொதுவாக உயிரைவிட மானம் பெரியது என்பதற்கு உதாரணமாக ஒருமயிர் உதிர்ந்து போனாலும் உயிரைவிடும் உயிரினம் கவர்மான் என்று உதாரணம் கூறுவார்கள். இதனை ஆசிரியர் கவரி என்பது மானா? என்னும் கட்டுரையில் கவரி என்பது இமயமலையில் பனி சூழ்ந்த இடங்களில் வாழும் ஓர்விலங்கு, இது மானின் ஒரு வகை அல்ல. குளிர்பகுதியில் வாழும் அவ்விலங்குமயிர் நீப்பின் உயிர்வாழ இயலாது என்பது கருதியே திருவள்ளுவர் இவ்வாறுகூறுகிறார் என்று தங்கச் ன்றுடன் விளக்கியுள்ளார்.

இந்நூலாசிரியர் சங்க இலக்கியத்தில் அரிய தகவல்கள் அடங்கியகட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூல் போன்றபடைப்புகள் இன்னும் வெளிவரவேண்டும்.இந்நூலின் சிறப்புக் கருதி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைப்புக்கல்லூரியில் இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இந்நூலை ஒருபாடமாக வைத்துள்ளது பாராட்டுகுரியது.

வலைகளில் சிக்கியவை

1. Twittev Bitz பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தை கற்பித்துவிட்டு பின் கடவுளை கற்பியுங்கள். @JKASa

2. twitter.com/thoatta: வளர்க்கும நாய்கள் வீடெங்கும் சுற்றி வருகின்றன. வேலைக்காரம்மாவின் குழந்தை பின் வாசலுக்கு வெளியே உட்கார்ந்து சாப்பிடுகிறது.

3. facebook.com/Rajan Leaks: குணப்படுத்தவே முடியாத வியாதிகளுக்கு "குணங்கள்" என்று பெயர்!

4. twitter.com/Goundar Roturns: நம்பிக்கை தானே எல்லாம் - நகைக்கடை விளம்பரம் அப்புறம் கடை வாசல்ல செக்யூரிட்டி எதுக்கு

5. twitter.com/vandaraalam எந்தத் தண்ணீர்டாங்கரும் ஒழுகாமல் பார்த்தது இல்லை எந்த பெட்ரோல் டாங்கரும் ஒழுகிப் பார்த்தது இல்லை. ரெண்டும் ஒரே நாட்டுலதான்

6. twitter.com/im_sme: ஏற்றுக் கொள்ள முடியாத "மாற்றங்களே" ஏமாற்றங்கள்

7.twitter.com/deepishtalks: ஒருகாலத்தில் நல்லா ஆங்கிலம் பேசறவங்கள வியந்து பார்த்த நாம இப்ப நல்லா தமிழ் பேசுறவங்கள வியந்து பார்க்கற நிலைமைக்கு ஆளாகிட்டோம்

face book

1.கையிலிருந்து செலவழிக்கும்போது "உழைப்பாகவும்" "கடன் அட்டைகளில்" இருந்து செலவு செய்யும் போது "நாகரிகமாகவும்" தெரிகிறது இந்தப் "பணம்" Heartkillersasi

2. மீத்தேன் திட்டத்தை ரத்து செய்த அரசு ஆவணத்தில் கையெழுத்திட்டது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் உள்ள இருக்கிற "மை" நிச்சியம் நம்மாழ்வாருடையது! Iniyaraipalgirrai.com

3. குழந்தையை வைத்துக் கொண்டு ஞானத்தை தேடுபவர்களுக்கு எட்டாக்கனி "ஞானநிலை"

Arunprasanna@arunprasanna83

## தமிழாயிரம் அதிகாரம் -1

திருச்சி மாவட்டம் திருவளா் குடியிலுள்ள திருவள்ளுவா் இந்நூலை தவச்சாலை சனவரி 2013 இல் வெளியிட்டுள்ளது. தமிழ் என்பது பல பொருள் ஒருசொல். அது தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு, தமிழா் பண்பாடு, தமிழா் நாகரிகம், தமிழா் கலைகள் தமிழா் போர் முறை, தமிழா் அரசு, தமிழா் அகம் புறமாம் வாழ்வியல் ஆகிய அனைத்தும் சுட்டும் அமிழ்தச் சொல். தமிழில் முதற்பா வெண்பா வெண்பாவில் முதற்பா குறுவெண்பாட்டு எனப்படும் குறட்பா

2. ஆற்றல் சால் பல் நூல்களை எழுதியும், தொகுத்தும், தமிழ் உலகிற்கு அளித்த இரா.இளங்குமரனார் அவர்கள் குறள் வெண்பா போன்ற அமைப்பில் தமிழைப் பற்றிய பொருண்மைகளைக் கொண்ட தமது ஆயிரம் குறட்பாக்களை தமிழாயிரம் என்னும் தலைப்பிலான நூலில் எழுதியுள்ளார்.

3. அந்நூலில் இருந்து முதல் அதிகாரமான 'தமிழ்ப் பழமை' என்னும் தலைப்பில் அமைந்த குறட்பாக்கள் இவை.

தமிழ்ப்பழமை

1. கதிர்ப்பிறப்புக் காட்டும் கலைத்தமிழைக் கண்போல்
மதிக்கும் மதியே மதி.
2. மதியோடு தென்றல் மகிழ்ந்து குலவக்
குதித்ததே தண்டமிழ் கூறு
3. கூறும் மலைதோன்றிக் கூடாரக் காடுதவழ்
பேறுடையாள் பேணு தமிழ்.
4. தமிழென்ன எண்ணேல்; தனிவான் பொழிந்த
அமிழ்தென்ன நன்றாய் அறி!
5. அறிந்தால்தான் "கற்றோன்றி மண்தோன்றாக் காலக்
குறிப்பறிவோம்" கொண்டிடுவோம் கோள்.
6. கோளழிக்கு முன்னர்க் குமரித்தாய் பெற்றதமிழ்
நாளென்றே நல்லுகை நாடு.
7. நாடெல்லாம் கல்லாகக் காடாகக் காட்சிதந்த
பீடு நாள் அன்னை பிறப்பு.
8. பிறப்பவள் உற்றநாள் எத்தாய் பிறந்தாள்
சிறப்பால் முதற்றாயாள் சீர்
9. சீர்த்த மொழிகள் செழிக்கப் பிறந்தவளே
சேர்த்த கொடையாம் தெளி.
10. தெளிந்தால் தமிழ்ப்பழமை தேர்வாய்! களிப்பாய்!
நெளியாய் புழுவாக நீ!

**கல்விச்சுற்றுலா**

தமிழ்ப்பண்பாட்டு மையமும், வரலாற்றுத்துறையும் இணைந்து 24.12.2016 அன்று தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநர் முனைவர்.சே.செந்தமிழ்ப்பாவை அவர்களின் தலைமையில் புதுக்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள சுற்றுலாத்தளங்களுக்குச் சென்றோம்.

முதலில் தமிழர்தம் ஓவியக்கலையின் சிறப்பைக் கூறும் சித்தன்ன வாசல், கட்டடக்கலை மற்றும் இசைக்கலையின் பெருமையை அறியச் செய்யும் குடுமியான்மலை போன்றவற்றைக் கண்டு களித்தோம். இவ்ஓவியங்களும் சிற்பங்களும் 1300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நம் முன்னோரின் அறிவுத்திறத்தை நன்கு புலப்படுத்தின. இதனையடுத்துத் திருக்கோர்ணம் அரசு அருங்காட்சியகத்தில் நம் முன்னோர் பயன்படுத்திய போர்க்கருவிகள் முதல் தீர்த்தங்கரர்கள் சிலைகள் வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதத்தைக் கண்டு மகிழ்ந்தோம் இதன் பின் கோட்டை கட்டி வாழ்ந்த தமிழர்தம் வாழ்வியலை விளக்கும் திருமயம் கோட்டையையும் போருக்குப் பயன்பட்ட அதன் அமைப்பு முறை, சிறப்பியல்புகள் போன்றவற்றையும் அறிந்தோம். ஒரே நாளில் தமிழர்களின் ஓராயிரப்பட்ட சிறப்புகளை அறிய முடிந்ததில் இக்கல்விச்சுற்றுலா பயனுள்ள சுற்றுலாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது



ஒளி படைத்த கண்ணினாய்.... உறுதி கொண்ட நெஞ்சினாய்..

**அன்பிற்கினியவர்களுக்கு,**

**இனிய நல்வணக்கம்**

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பண்பாட்டு மைய ஆய்வாளர்கள் நாங்கள் திக்கெட்டும் முழங்கட்டும் தேமதுரத் தமிழோசை என்னும் பொறிக்கோளோடு தேமதுரம் என்னும் மின்னிதழை இத்தைத்திங்களில் துவங்கியுள்ளோம். பண்பாட்டு விழுமியங்களைப் பரவலாக்கும் வேள்வியில் நாங்கள் மூட்டியிருப்பது ஒரு சிறுபொறி மட்டுமே.. இச்சிறுபொறி தமிழ்ப் பண்பாட்டை இளையோரிடம் எடுத்துச் செல்லும் பெரு நெறியாய் அமையும் என்பது திண்ணம். "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்ற சொலவடை நீண்ட நெடுங்காலமாய் நம் பேச்சு வழக்கிலிருக்கிறது. வலிகளோடு மட்டுமே உடன்படிக்கை செய்து கொண்ட நமக்கு இந்த "தை" யில் புதிய பாதை இளைய சமுதாயத்தால் திறக்கப்பட்டிருக்கிறது. சல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரி சமூகவலைத்தளங்களின் மூலம் ஒன்றிணைந்த தமிழக மாணவர்கள் - இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டம் உலகம் முழுக்க கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. பொதுவாக, உணர்ச்சிகள் மேலோங்க பொதுச்சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் போராட்டங்களிலிருந்து மாறுபட்டு, அறவழியில் பொதுமக்களுக்கு இடையூறின்றி இராணுவக் கட்டுக்கோப்போடு நடைபெற்ற இளைஞர்களின் போராட்டம் எல்லோரது புருவத்தையும் உயர்த்த வைத்துள்ளது. எனவே தான் கிராமங்கள், நகரங்கள், பெருநகரங்கள் என எல்லாத் தளங்களிலும் கூட்டம் கூட்டமாய், குடும்பம் குடும்பங்களாய், கைக்குழந்தைகள் முதல் கைத்தடி ஊன்றும் முதியோர் வரை போராட்டத்தில் பங்கேற்றனர். அதுவும் உணர்ச்சி வேகத்தில் கூடிக் கலைகின்ற கும்பல்களாய் அல்லாமல் மொழி-இன உணர்வோடு ஒருமித்த குரலெழுப்பி, கொள்கையில் உறுதியோடு நின்று அதனை வென்றெடுக்கும் வலிமையுள்ள கூட்டமாய் ஒன்றிணைந்து, கட்சி போராட்டத்தலைமை இவற்றையெல்லாம் புறந்தள்ளி போராடி வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

போராட்டத்தின் பொது நோக்கம் சல்லிக்கட்டுத் தடையை நீக்க வேண்டுமென்பதாக இருந்தாலும் பண்பாட்டு அடையாளங்களை - பாரம்பரியக் கலைகளை மீட்டெடுத்தல், மரபுரிமையை - இனவுணர்வை நிலைநாட்டல், அந்நியப் பொருட்களை - நிறுவனங்களை புறக்கணித்தல், உழவையும் - உழவர்களையும் பாதுகாத்தல் போன்ற பலவிதப் பொருண்மையில் உரிமை முழக்கங்களைக் கேட்க முடிந்தது. விவசாயத்திலிருந்து, பண்பாட்டு அடையாளங்களிலிருந்து அந்நியப்பட்டிருந்த மாநகர மாணவர்களை- தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் நோக்கி மடைமாற்றம் செய்த பெருமையையும் இப்போராட்டம் பெற்றிருக்கிறது. பண்பாட்டை மீட்க பட்டாளமாய் மொழி- இன உணர்வோடு திரண்டிருக்கிற இளையோரைக் காணுகையில் பாரதியின் பாடல் தன்னெழுச்சியாய் செவிகளில் ஓங்கி ஒலிக்கிறது.

**"ஒளிபடைத்த கண்ணினாய் வா.. வா..**
**உறுதிகொண்ட நெஞ்சினாய் வா.. வா..."**

தமிழ்ப்பண்பாட்டை காக்கும் இளையோரின் உரிமை முழக்கத்தில், எங்கள் தேமதுரத் தமிழோசையும் சங்கமிப்பதில் பேருவகை கொள்கிறோம்..

தோழமையுடன்,

ஆசிரியர் குழு.

# தேமதுரம் - மின்னிதழ்


**ஆசிரியர்**

ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

**இணையாசிரியர்**

நெ.கிருஷ்ணவேணி

**துணையாசிரியர்**

மு.செண்பகவள்ளி

**ஆசிரியர்குழு**

ஆ.அருள்சாமி

கா.சுபா

பெ.குபேந்திரன்

ஆ.சகுந்தலா

வ. மீனாட்சி

**கணினிதட்டச்சு**

ப.லெட்சுமி

**தொடர்புமுகவரி**

தமிழ்ப்பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி-3

தேசியக்கருத்தரங்கம் - 2016

தமிழ்ப்பண்பாட்டு மையம் மற்றும் நுண்கலைத்துறை சார்பில் "தமிழ்ப்பண்பாட்டில் கலைகளின் பங்கு" என்னும் தலைப்பில் 16.12.2016 அன்று தேசியக்கருத்தரங்கம் நிகழ்த்தப்பெற்றது. தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநர் பேரா.சே.செந்தமிழ்ப்பாவை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்பமை துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் தலைமையில் கலைமாமணி டி.ஆர் மகாலிங்கம் அவர்களின் புதல்வி டி.ஆர்.எம்.சாவித்ரிமகாலட்சுமி அவர்கள் "இசைத்தமிழ் வாழ்வில் இனிமை தரும் தமிழ்" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்க ஆய்வுக்கோவையைச் சிறப்பு விருந்தினர் வெளியிட துணைவேந்தர் பெற்றுக்கொண்டார். நுண்கலைத்துறை இயக்குநர் கலைமாமணி முனைவர் மா.சுப.சரளா அவர்கள் நன்றியுரையாற்றினார். நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கினர். இதன் பின் சப்பானைச் சார்ந்த "தயெகோகுரோகவா" என்பாரின் பறை இசை நிகழ்வு மின்திரையில் வழங்கப்பெற்றது. நிறைவு விழாவில் முனைவர் கா.கணநாதன் அவர்கள் வரவேற்க, பல்கலைக்கழகப் பதிவாளர் தலைமையேற்க ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் நாராயணமூர்த்தி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். பேரா.நா.வள்ளி (மேனாள் முதல்வர் இராமசாமி தமிழ்க் கல்லூரி) அவர்கள் கருத்தரங்க மதிப்புரை வழங்க முனைவர் மு.சு.கனகதாரா அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.



தமிழ்ப்பண்பாட்டுமையம் சார்பில் கொண்டாடப்பட்ட பொங்கல் திருநாளில் அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் பேரா.வி.பாலச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்

